


10.02.2025

தலைப்பு செய்திகள்

- ஃபிரான்ஸ் அமெரிக்க நாடுகளுக்கு அரசு முறை பயணமாக பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று புறப்பட்டு சென்றார்.
- மாணாக்கர் தேர்வை எதிர்கொள்ள ஊட்டச்சத்து உணவுகளும், உடல் நலமும், மிக அவசியம் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- ராணுவ தளவாட உற்பத்தியில் இந்தாண்டு சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.
- தமிழக அமைச்சரவை கூட்டம் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.
- புதுதில்லியில் நடைபெறும் சேலஞ்சர் கோப்பை டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் கரண்சிங் இன்று களமிறங்குகிறார்.

இனி விரிவான செய்திகள்

***********

பிரதமர் ஃபிரான்ஸ்

பிரதமர் திரு.நரேந்திரமோடி அரசு முறை பயணமாக இன்று ஃபிரான்ஸ் அமெரிக்க நாடுகளுக்கு புறப்பட்டு சென்றார்.

இந்த பயணத்தின்போது இவ்விருநாடுகளுக்கிடையிலான அரசியல் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதோடு, தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படுகிறது.

ஃபிரான்ஸில் அந்நாட்டு அதிபர் இம்மானுவேல் மேக்ரனுடன் இணைந்து நாளை நடைபெற உள்ள செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் பிரதமர் தலைமை உரையாற்றுகிறார்.

இந்த பயணத்தின்போது முக்கிய இருதரப்பு பேச்சுவார்த்தைகளை பிரதமர் மேற்கொள்வதோடு மார்ஷெய்லில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தியாவின் புதிய தூதரகத்தையும் திறந்துவைக்கிறார்.

புறப்படுவதற்கு முன்னர் பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தமது இந்த பயணம் இந்த நாடுகளுடனான நட்புறவை அதிகரிப்பதோடு தொழில்நுட்பம், வர்த்தகம் பாதுகாப்பு, எரிசக்தி, விநியோக சங்கிலியின் திறன் உள்ளிட்டவை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

***********

பரிக்ஷா பே சர்ச்சா

முன்னதாக பரிக்ஷா பே சர்ச்சாவின் 8ஆவது பதிப்பில் மாணாக்கரிடையே கலந்துரையாடிய பிரதமர் தேர்வு நேர மன அழுத்தத்தையும் அச்சத்தையும் கையாளும் முறைகளை எடுத்துரைத்தார்.

சிறுதானியங்கள் மற்றும் காய்கறிகளின் அவசியத்தை வலியுறுத்தினார்.

ஊட்டச்சத்து உணவுகளும், உடல் நலமும், தேர்வை எதிர்கொள்ள மிக அவசியமானது என்று கூறிய அவர் தூக்கத்தின் முக்கியத்துவம் தொடர்பான அறிவியலையும் சுட்டிக்காட்டினார்.

காலை சூரிய ஒளியை மாணாக்கர் பயன்படுத்திக்கொள்வதன் மூலம் நல்ல எழுச்சியையும் ஊக்கத்தையும் பெற முடியும் என்றும் பிரதமர் அறிவுறுத்தினார்.

தேர்வு அழுத்த சவால்களை எதிர்கொள்வதற்கான யுக்திகளை எடுத்துரைத்த பிரதமர் இத்தகைய சவால்களைஎதிர்கொள்ள மாணாக்கர் தங்களை தயார்படுத்திக்கொள்வதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

தேர்வு கால நேரத்தை நிர்வகிக்கும் திறனின் அவசியத்தை சுட்டிக்காட்டிய அவர் விரும்பாத பாடங்களை விரும்பும் செயல்திறனை உருவாக்குவதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைத்தார்.

நாட்டின் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 36 மாணாக்கர் இந்நிகழ்வில் பிரதமருடன் நேரில் கலந்துரையாடினர்.

5 கோடி பேர் ஒருங்கிணைந்த கற்றல் திறனுக்கான இக்கொண்டாட்டங்களில் பங்கேற்றனர்.

தேர்வு காலங்களில் மாணவர்களின் அச்சத்தை போக்கும் வகையில் பிரதமர் தொடர்ந்து கலந்துரையாடிவரும் நிலையில் மாணாக்கருக்கு இது ஆளுமையை ஏற்படுத்துவதோடு கொள்கை மற்றும் நடைமுறைகளுக்கு இடையே உள்ள இடைவெளியை களைய வழிகோலுவது குறிப்பிடத்தக்கது.

***********

விமான கண்காட்சி

ஏரோ இந்தியா விமான கண்காட்சியின் 15ஆவது பதிப்பை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் இன்று பெங்களூருவில் துவக்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர் இந்த வான்வெளி கண்காட்சி நம் ராணுவத்தின் வலிமையையும், திறனையும் பறைசாற்றுவதாக எடுத்துரைத்தார்.

நம் தொழில்நுட்பம் மற்றும் தொழில்திறன் முன்னேற்றங்களை உலகம் அறிந்துகொள்ள இத்தகைய கண்காட்சிகள் பயனளிப்பதாக கூறிய அவர் இதன்மூலம் நட்பு நாடுகளுடனான ஒத்துழைப்பு மேலும் அதிகரிக்கும் என்றார்.

உள்நாட்டு தளவாட உற்பத்தியின் அவசியத்தை எடுத்துரைத்த அமைச்சர் இதன்மூலம் இந்தியாவிலேயே வடிவமைத்து மேம்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதை குறிப்பிட்டார்.

2025ஆம் ஆண்டு ராணுவ தளவாட உற்பத்தியில் சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று கூறினார்.

இப்பிரிவில் ஆராய்ச்சிகளையும் படைப்பாற்றல் திறனையும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் சீரிய தலைமையில் நிலையான ஒருங்கிணைந்த திறன்மிகு நிலைப்பாடுகளை கொண்ட வடிவமைப்புகளுக்கான ராணுவ உற்பத்தி சூழல் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நம் நாட்டின் ராணுவ உற்பத்தி திறன் உலகின் முதல் 5 இடங்களில் ஒன்றாக திகழ்வதோடு பொருளாதார வளர்ச்சியிலும் அது முக்கிய பங்காற்றுவதாக குறிப்பிட்டார்.

சுய சார்பு பாரதத்திற்கு உத்வேகம் அளிக்கும் வகையில் உள்நாட்டு உற்பத்திக்கு கூடுதலாக 9.53 சதவிகிதம் நிதி நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக கூறினார்.

உள்நாட்டு உற்பத்தி ஒரு லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்துள்ளதாகவும்,

21 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி மேம்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக கண்கவர் வான்சாகச நிகழ்ச்சிகளையும் திரு.ராஜ்நாத்சிங் பார்வையிட்டார்.

***********

மாநிலங்களவை சி.ஆர்.பாட்டில்

ஊரக பகுதிகளில் தூய்மை பாரத திட்டத்தின் கீழ் 12 கோடி கழிவறைகள் கட்டப்பட்டதன் மூலம் 3 லட்சம் குழந்தைகளின் உயிர்கள்

பாதுகாக்கப்பட்டிருப்பதாக மத்திய ஜல்சக்தி நீர்மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.சி.ஆர்.பாட்டில் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர், இதன்மூலம் 7 கோடி மக்கள் விழிப்புணர்வு பெற்றதோடு அவர்களின் பழக்க வழக்கங்களிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

உலக சுகாதார அறிக்கையை மேற்கோள்காட்டிய அமைச்சர் கழிவறைகள் கட்டபட்டதால் ஊரக மகளிரின் ஆரோக்கியம் மேம்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

குடிநீர் பற்றாக்குறை உள்ள இடங்களில் கழிவறைகளுக்கான நீர்தேக்க தொட்டிகள் கட்டும் முயற்சிகள் நடைபெறுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

5 லட்சம் கிராமங்கள் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத பகுதிகளாக உருவெடுத்திருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

***********

திறன்மேம்பாடு

திறன்மேம்பாட்டு பணிகளுக்கான மத்திய அரசின் அணுகுமுறை படைப்பாற்றல் திறனை மேம்படுத்துவதோடு, பள்ளிகளில் இருந்தே இதற்கான சூழல் உருவாக்கப்படுவதாக மத்திய திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.ஜெயந்த் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர் தேசிய கல்வி கொள்கை 2020-இன் மூலம் இந்த அணுகுமுறைக்கான பணிகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டார்.

பல்வேறு மாநிலங்கள் திறன்மேம்பாட்டிற்கான நிறுவனங்களை ஏற்படுத்தி வருவதாகவும், தேவைப்பட்டால் இந்நிறுவனங்களுக்கு மத்திய அரசு உரிய ஆதரவு அளிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

பழங்குடியின சமூக மக்களின் திறன்களை மேம்படுத்துவத்றகான பணிகளில் மத்திய அரசு முனைப்புடன் ஈடுபட்டுள்ளதாக கூறிய அவர் பிரதமரின் இளையோர் திறன்மேம்பாடு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை எடுத்துரைத்தார்.

***********

நிர்மலா சீதாராமன்

வங்கிகளில் தங்க நகை கடன் பெற்றவர்களின் நகைகளை ஏலம் விட கடும் விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றிற்கு பதில் அளித்த அவர் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளும் இந்நடைமுறையிலேயே செயல்படுவதாக குறிப்பிட்டார்.

ஏலம் விடுவது குறித்து சம்மந்தப்பட்டவர்களுக்கு முன்னரே தகவல் அனுப்பப்படுவதாகவும், அதன் அடிப்படையில் தான் ஏலம் விடப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

***********

ஜே.பி.நட்டா

யானைக்கால் நோயை முற்றிலும் அகற்றுவதற்கான அரசின் வழிமுறைகளை மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா எடுத்துரைத்துள்ளார்.

யானைக்கால் நோய் தடுப்பு மாத்திரை வழங்கும் முகாமை இன்று காணொலி மூலம் துவக்கிவைத்து பேசிய அவர் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் இம்முகாமை முனைப்புடன் கண்காணிப்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

இந்நோய்க்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளை எடுத்துரைத்த அவர் மாநில அமைச்சர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சட்டபேரவை உறுப்பினர்கள் இணைந்து யானைக்கால் தடுப்பு இயக்கத்தை முன்னெடுத்துச்செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

***********

குடியரசு தலைவர்

உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் மகா கும்ப திரிவேணி சங்கமத்தில் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புனித நீராடினார்.

சிறப்பு பூஜைகளையும் அவர் மேற்கொண்டார்.

படகு மூலம் திரிவேணி சங்க பகுதிக்கு சென்ற குடியரசு தலைவர் அங்குள்ள சைபீரிய பறவைகளை கண்டுகளித்ததோடு உணவளித்து மகிழ்ந்தார்.

***********

அமைச்சரவை கூட்டம்

தமிழக அமைச்சரவை கூட்டம் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 2025-26-ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், இடம்பெற வேண்டிய முக்கிய அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது.

அமைச்சரவை கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன் சென்னையை சுற்றியுள்ள 4 மாவட்டங்களில் பட்டா வழங்கும் பணிகள் இன்னும் 6 மாதங்களுக்குள் நிறைவடையும் என்றார்.

வாய்ஸ்

***********

மா. சுப்பிரமணியன்

தமிழ்நாட்டில் காலியாக உள்ள 2 ஆயிரத்து 622 மருத்துவ காலிப்பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

தேசிய குடற்புழு நீக்க நாளை ஒட்டி சென்னையில் அரசு பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் நாட்டிலேயே முதல் முறையாக குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்குவது சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அரசு பள்ளிகளில் தொடங்கிவைக்கப்பட்டதாக கூறினார்.

கடந்த ஜனவரி மாதம் 2 ஆயிரத்து 553 மருத்துவ காலிப்பணியிடங்களுக்கான தேர்வுகள் நடைபெற்றதாகவும் தற்போது கூடுதலாக 89 பணியிடங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

***********

குடற்புழு நீக்கம்

மாநிலம் முழுவதும் தேசிய குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கும் முகாம்கள் இன்று நடைபெறுகின்றன.

பள்ளி கல்லூரிகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் 1 முதல் 19 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள், வளர் இளம் பருவத்தினருக்கு இம்மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

***********

வி.சி.சந்திரகுமார் பதவி ஏற்பு

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் வெற்றிபெற்ற திரு.வி.சி.சந்திரகுமார் சட்டமன்ற உறுப்பினராக இன்று பதவி ஏற்றுக்கொண்டார்.

சென்னை தலைமை செயலகத்தில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் முன்னிலையில் பேரவை தலைவர் திரு.அப்பாவு அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

***********

கோவில்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் முத்துக்குமார சுவாமி வள்ளி தெய்வாணை திருக்கல்யாண வைபவம் இன்று விமரிசையாக நடைபெறுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

இதனிடையே தைப்பூசம் நாளை நடைபெறுவதை ஒட்டி பக்தர்களின் வசதிக்காக பேருந்து நிலையம், ரயில்நிலையம் மற்றும் சண்முகா நதியிலிருந்து இன்று முதல் 3 நாட்களுக்கு அரசு பேருந்துகள் இலவசமாக இயக்கப்படுகின்றன.

மேலும் மலைக்கோவிலில் இலவச தரிசனம் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

***********

கும்பாபிஷேகம்

தமிழகத்தின் பல்வேறு திருக்கோவில்களில் இன்று மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

தஞ்சாவூர் அருள்மிகு புன்னை நல்லூர் மாரியம்மன் திருக்கோவிலில் நடைபெற்ற குடமுழுக்கில் ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

கோவை பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் சுவாமி திருக்கோவில்,

கள்ளக்குறிச்சி ஸ்வர்ணகடேஸ்வரர் திருக்கோவில்,

ராணிப்பேட்டை ஸ்ரீனிவாச பெருமாள் திருக்கோவில் உள்ளிட்ட கோவில்களில் நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

கன்னியாகுமரி அருள்மிகு பூதபாண்டி பூதலிங்க சுவாமி சிவகாமி அம்பாள் திருக்கோவில் தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

***********

டென்னிஸ்

புதுதில்லியில் நடைபெறும் சேலஞ்சர் கோப்பை டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் கரண்சிங் - கஸகஸ்தானின் Timofey Skatov-வை இன்று எதிர்கொள்கிறார்.

***********

கால்பந்து

புபனேஸ்வரில் நடைபெறும் ஐ.எஸ்.எல் கால்பந்து போட்டியில் இன்று இரவு ஏழரை மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் ஒடிஷா - பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

***********

கிரிக்கெட்

இந்திய இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 ஆவது இறுதி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி அஹமதாபாத்தில் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரை இந்தியா 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது